**கவனிக்க**.- *16.06.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2025 - 2017 ජූනි මස 23 වැනි සිකුරාදා - 2017.06.23

*2025 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1065 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூன் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2017

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2017 ஆம் வருடத்திற்காக பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இங்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயது.-** 2017.07.31 ஆந் திகதியன்று வயது 16 இற்குக் குறையாமலும் 25 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) **கல்வித் தகைமைகள்.-** சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட மேலும் ஏதேனும் 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஒரே அமர்வில் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **பயிற்சி நெறி.-** பயிலுநர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பயிலுனர்களுக்குக் கீழ்க்காணப்படும் தொழிலும் அத்தொழிற் பயிற்சிக்கு உகந்த காலவெல்லைக்குள் கற்பதற்குமான வசதிகளும் அளிக்கப்படும். பயிற்சிநெறிகள் சிங்கள மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படுவதுடன் கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர் :-

1. டீசல் என்ஜின் இயந்திர தொழில்நுட்பவியலாளர் - வருடம் 2 1/ 2
2. ஒட்டும் நுட்பவியலாளர்/ ஒட்டுநர் - வருடம் 3
3. மின் தொழில்நுட்பவியலாளர் (சக்தி) - வருடம் 3 1/ 2
4. இயந்திர தொழில்நுட்பவியலாளர் (பொது) - வருடம் 3 1/ 2

4. **விண்ணப்பம்.-** விண்ணப்பதாரர்கள் இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ற வகையில் (ஏ4) வெள்ளைத் தாளில் தயாரித்து சரியான முறையில் குறிப்பிடப்படல் வேண்டும். சரியான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்.-** (i) எழுத்து மூலமாகவும் செயல் மூலமாகவும் ஆன பரீட்சிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளதும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதுமான விண்ணப்பதாரர்கள் மட்டும் எழுத்துமூலமான பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) **எழுத்துமூலப் பரீட்சை.-** கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு மற்றும் பொது அறிவையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்துமூலமான பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறிகளின் தன்மைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) எழுத்துமூல மற்றும் தொழில் தகைமை பரிசோதனைகளின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழி மூலம்.-** பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்.-** இப்பரீட்சைக்காக மீள வழங்கப்படாத 500 ரூபா பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் மருதானை தபால் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு புகையிரத பொது முகாமையாளரின் பெயருக்கு காசுக் கட்டளையாக செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற்காகவோ பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

8. **பரீட்சை நிலையம்.-** சகல தகைமைகளையும் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலமான பரீட்சை கொழும்பில் உள்ள பரீட்சை நிலையத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தம் கைச்சாத்திடல்.-** பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கான குறித்த காலவெல்லைக்குள் பயிற்சியைத் திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. பயிற்சி நெறிக்கான குறித்த கால எல்லைக்குள் பயிலுநர்களுக்கு தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

11. தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்கு தொழில் வழங்கப்படுவதற்கான உத்தரவாதம் திணைக்களத்தினால் வழங்கப்படமாட்டாது.

12. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்றவகையில் விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரித்து, “பணிப்பாளர், இலங்கை - ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை” எனும்

முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இ.ஜே.பு.தொ.ப.நி-2017' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

13. **விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**.- விண்ணப்பப்படிவம் 2017.07.31 ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரதச் சேவை,
கொழும்பு 10,
2017, மே 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2017**

(அலுவலக உபயோகத்திற்காக)

1. முழுப்பெயர்:
(சிங்களத்தில்/ தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி:
(சிங்களத்தில்/ தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :----.

5. பால் (ஆண்/ பெண்) :----.

6. தொலைபேசி இலக்கம் :----.

7. கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. சாதாரண தரம் :

சுட்டெண் :

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | .................................... | .................. |
| 2. | .................................... | .................. |
| 3. | .................................... | .................. |
| 4. | .................................... | .................. |
| 5. | .................................... | .................. |
| 6. | .................................... | .................. |
| 7. | .................................... | .................. |
| 8. | .................................... | .................. |
| 9. | .................................... | .................. |
| 10. | .................................... | .................. |

8. கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. (உயர் தரம்) :

சுட்டெண் :

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | .................................... | .................. |
| 2. | .................................... | .................. |
| 3. | .................................... | .................. |

9. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ----.

10. விண்ணப்பம் கோரப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப தனக்கு விருப்பமான தொழில் பயிற்சிகள் இரண்டை முறையாகக் குறிப்பிடவும் :

(1) :----.
(2) :----.

11. ......................... தபால் அலுவலகத்திற்கு 500 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் இலக்கம் ........................... உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன். (காசுக் கட்டளை விலகாத முறையில் இத்துடன் இணைக்கவும்.)

12. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தகவல்கள் தவறானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவவேன் எனவும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6-712

---

**கல்வி அமைச்சு**

பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதல் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களை பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளல் - கல்வியாண்டு 2016/ 2017

2016/ 2017 ஆம் கல்வியாண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க

அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி ;

(ii) விஞ்ஞானமாணி பட்டப் பாடநெறி.

2. **விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :**

(i) 2012 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் நடாத்தப்பட்ட பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) முதற் கட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேற்றுப் பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.) ;

(ii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்திசெய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும் ;

(iii) தற்போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவகத்திலோ பாடநெறிகளைத் தொடர்வதற்காகப் பதிவு செய்தவராக இருத்தல் ஆகாது ;

(iv) இவ்விசேட அனுமதியின்கீழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்குப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலாகும். இதற்கு மேலதிகமாக உரிய பல்கலைக்கழகத்தின் தீர்மானத்திற்கு ஏற்ப விஞ்ஞானப் பட்டப் பாடநெறியைத் தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் அப்பல்கலைக்கழகத்தினால் வாய்மூலப் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவதுடன் கலைப்பட்டப் பாடநெறியைத் தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவார்கள் ;

(v) இப்பாடநெறியைத் தொடர்வதற்குத் தெரிவுசெய்யப்படுவார்களாயின் அவர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்பட வேண்டியபடியால் கற்கை விடுமுறை உரிமை கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக்கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின்போது வினவப்படும்.

4. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான பொறுப்பை இவ்வமைச்சு ஏற்றுக்கொள்ளாது.

5. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் அப்பாடசாலையின் அதிபர்/ முகாமையாளரால் உரிய ஆசிரியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்கப்பட முடியும்/ முடியாது என்பது தொடர்பாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

6. அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினாலும், அரசாங்க அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர்/ முகாமையாளர் ஆகியோராலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சகல விண்ணப்பப்பத்திரங்களும் இங்கு கீழே குறிப்பிடப் படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்து இரண்டு (2) பிரதிகளாக ''செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்ல'' என்ற முகவரிக்கு 2017.07.14 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2016/ 2017 இல் (ஆசிரியர்களுக்காக) இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

சுனில் ஹெட்டியாரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

| |
|---|
| |

பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2016/ 2017

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

(ii) முழுப்பெயர் :----.

2. பால் : ஆண்/ பெண் :----.

3. (i) பதவி :----.

(ii) தரம் :----.

4. முகவரி -
சொந்த :----.
அலுவலக :----.

5. தொலைபேசி -
நிலையான இல. :----.
கையடக்க இல. :----.

6. மின்-அஞ்சல் முகவரி :----.

7. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இடம் -

(i) பாடசாலை :----.
(ii) வலயம் :----.
(iii) மாவட்டம் :----.
(iv) மாகாணம் :----.

8. (i) முதல் நியமனத் திகதி :----.
(ii) நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(iii) சேவைக்காலம் (நியமனத் திகதியிலிருந்து முடிவுத் திகதிவரை) :

வருடங்கள் .......... மாதங்கள் .......... நாட்கள் ..........

9. ஆசிரியராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள இல. :----.

10. (i) பிறந்த திகதி :

ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

(ii) வயது (விண்ணப்பத்தின் முடிவுத் திகதியன்று)

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

11. தகுதிகாண் பரீட்சையின் விபரங்கள்.- (பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்றுத்தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.) :

(i) பரீட்சை :----.
(ii) பல்கலைக்கழகம் :
(iii) பெறுபேறு :

| பாடம் | தகுதிபெற்ற வருடம் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

12. பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற பட்டப் பாடநெறியின் பெயரும் பாடங்களும் :

(i) பட்டப் பயில்நெறியின் பெயர் :----.
(ii) பாடங்கள் :

(1) -----
(2) -----
(3) -----

13. நீர் தெரிவுசெய்யப்படின், அனுமதிக்கு எதிர்பார்க்கப்படும் பல்கலைக்கழகங்களின் பெயர்களை விருப்புரிமை ஒழுங்கில் குறிப்பிடுக :-

(1) -----
(2) -----
(3) -----
(4) -----

14. ஏதாவது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றில், தேசிய கல்விக் கல்லூரியில், பல்கலைக்கழகத்தில் அல்லது தேசியக் கல்வி நிறுவனத்தில் வேறு பாடநெறி யொன்றிற்கு ஏற்கனவே பதிவுசெய்துள்ளீரா ? :----.

"ஆம்" எனில், அதன் விபரங்கள் :
..........................................................................................
..........................................................................................

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

திரு./திருமதி/செல்வி/வண. ................................................ என்பவர் ................................................................ இலிருந்து செயற்படத்தக்கதாக ................................................................ இல் (பாடசாலையின் பெயர்) ................................................ ஆக (பதவி/ தரம்) சேவையாற்றுவதுடன், இப்பாடசாலையில் அவரது கடைசிச் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டது. மேற்படி பட்டப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அவர் விடுவிக்கப்படலாம்/ விடுவிக்கப்பட முடியாது என்பதுடன், விண்ணப்பதாரிக்கு அவசியமான கல்விக்கான விடுமுறையை நான் அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கவில்லை (சிபாரிசு செய்யா விட்டால், தயவுசெய்து காரணங்களைக் குறிப்பிடுங்கள்) :
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

சிபாரிசு செய்கிறேன்/ செய்யவில்லை.

----,
அதிபர்/ முகாமையாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.

சிபாரிசு செய்கிறேன்/ செய்யவில்லை.

----,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.

சிபாரிசு செய்கிறேன்/ செய்யவில்லை.

----,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.

6-804

---

திருத்தம்

**இலங்கை சுங்கத் திணைக்களம்**

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் "சுங்க உதவி அத்தியட்சகர் - தரம் II மற்றும் சுங்கப் பரிசோதகர் - தரம் II ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" தொடர்பான விண்ணப்ப முடிவுத் திகதியை நீடித்தல்

நாட்டில் நிலவிய வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட அசாதாரண நிலைமையினைக் கருத்திற்கொண்டு, 2017.05.26 ஆந் திகதிய 2021 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை சுங்கத் திணைக்களத்தின் II ஆம் தர சுங்க உதவி அத்தியட்சகர் மற்றும் II ஆம் தர சுங்கப் பரிசோதகர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படும் முடிவுத் திகதி 2017.06.23 இலிருந்து 2017.07.07 ஆந் திகதி வரை 14 நாட்களினால் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**குறிப்பு**.- II ஆம் தர சுங்க உதவி அத்தியட்சகர் மற்றும் II ஆம் தர சுங்கப் பரிசோதகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குரிய திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரல் தொடர்பிலான 2017.05.26 ஆந் திகதிய 2021 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளில் மாற்றம் எதுவும் இல்லை.

டபிள்யூ. ஏ. சூலானந்த பெரேரா,
சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

சுங்க இல்லம்,
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

6-180